**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No. 65/2025** |
| Prosecution witness | : | P.W. 6 |
| List of Witness | : | L.W. 7 |
| Name | : | கோபிநாத் |
| Father's /Husband Name | : | பரமசிவம் |
| Village | : | நவல்பட்டு காவல்நிலையம் |
| Taluk | : | திருவெறும்பூர் |
| Age | : | 50 |
| Occupation | : | உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 21st day of May 2026. Accused present.

**முதல் விசாரணை:**

நான் தற்போது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள நவல்பட்டு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 13.06.2024 ம் தேதியன்று நான் குடவாசல் காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பிலிருந்த போது சிலம்பரசன் மனைவி சுகன்யா என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று காவல் நிலைய மனு எண். 364/2024 ஆக மனு பதிவு செய்யப்பட்டு மனு விசாரணைக்கு பின் கடந்த 17.06.2024 ம் தேதி அன்று காவல் நிலைய குற்ற எண்.215/2024 இதச சட்டப்பிரிவுகள் 294(b), 352,506(1) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

பின்னர் இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றைய தினமே 14.00 மணியளவில் சம்பவ இடமான எண்கன் கீழ காலணித்தெருவில் உள்ள இந்திராணி ஓட்டுவீட்டு முன்பாக சென்று சாட்சிகள் கண்ணன் மற்றும் வினோத் ஆகியோர்களின் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(பார்வை மகசர் அ.சா.ஆ.3 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலான சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் இவ்வழக்கில் சம்பவம் உண்மை என்று தெரிய வர எதிரியை தேடி வந்த நிலையில் எதிரி திருவாரூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன் பிணை பெற்று திருவாரூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஆஜராகி தக்க சட்ட வழிகாட்டுதலுடன் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என்ற விவரத்தினை தெரிந்து கொண்டேன்.

இத்துடன் எனது புலன் விசாரணை முடித்து எதிரியின் செய்கையானது இதச சட்டப்பிரிவுகள் 294(b), 352,506(1) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் தண்டித்தக்க குற்றமென கடந்த 02.07.2024ம் தேதி அன்று குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

அ.சா.1 டமிருந்து எந்த தேதியில் புகார் பெற்றேன் என்றால் 13.06.2024ம் தேதி அன்று புகாரைப்பெற்றேன். இவ்வழக்கில் 5 நாட்கள் காலதாமதாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை Coloumn no. 3 b யில் காவல்நியைத்திற்கு 17.06.2024 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் பெற்ற நாள் அன்று மனு ரசீது செய்யப்பட்டது. மனு ரசீது எண் 364/2024 ஆகும். மேற்படி மனு ரசீதும் அது சம்பந்தமாக செய்யப்பட்ட விசாரணை அறிக்கையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்ன காரணத்திற்காக மனு ரசீது செய்யப்பட்டது என்றால் வழக்கின் உண்மை தன்மையை அறிவதற்காக மனு ரசீது செய்யப்பட்டது. பொதுவாக பிணையில் விடமுடியாத குற்றம் நடந்துள்ள நிலையில் உடனடியாக வழக்கு பதிவு செய்யப்பட வேண்டும் என்றால் சரிதான். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை மகசர், வரைபடம் மற்றும் பட்டியல் சாட்சிகள் மற்றும் இறுதி அறிக்கை ஆகியவற்றை நான் தான் விசாரணை செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் பட்டியல் சாட்சி -2 இந்திராணி ஓட்டுவீடு முன்பு என்றால் சரிதான். அ.சா.1 க்கும் ஆஜர் எதிரிக்கும் முன் விரோதம் உள்ளது என்று நான் தாக்கல் செய்த இறுதி அறிக்கையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். ஆஜர் எதிரிக்கும் அ.சா.1 க்கும் முன் விரோதம் உள்ளது என்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த போது தெரியுமா என்றால் மனு ரசீது விசாரணை மூலம் தெரிந்து கொண்டேன். அ.சா.1 எந்த ஊரில் வசித்து வருகிறார் என்று தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். அவர் முகவரி கீழகாலணி, எண்கன் கிராமம், குடவாசல் தாலுக்கா என்று தெரிந்து கொண்டேன். பட்டியல் சாட்சிகள் 2, 3, 4 ஆகியோர் அ.சா.1 ன் உறவினர்கள் என்று தெரிந்துகொண்டேனா என்றால் பக்கத்து வீட்டில் வசிப்பவர் என்று தெரிந்து கொண்டேன். பட்டியல் சாட்சிகள் 2, 3, 4 ஆகியோர் அ.சா.1 ன் உறவினர்கள் என்றாலும் நான் சரிவர விசாரணை செய்ய வில்லை என்றாலும் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் அ.சா.1 ன் அழுத்தத்தின் பேரில் முதல் தகவல் அறிக்கை

பதிவு செய்துள்ளேன் என்றாலும் இவ்வழக்கு சம்பந்தமான ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :

இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.21 12:59:05 +0530

`

District Munsif cum
Judicial Magistrate,
Kodavasal.